1982 மார்ச் 1]

செய்கிறபோது, நடைமுறை விதிகளை மேற்கொள்ளுகிறபோது, மிகமிகத் தாழ்ந்த, பொருளாதார வசதியற்றவர்களுக்கு உதவி செய்வதே இந்த வாரியத்தின் நோக்கம். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதற்காக பொருள், பணம் வசதி படைத்தவர்கள் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டுமென்பது பொருளல்ல. நடைமுறை விதிகளை வகுக்கும்போது, மாண்பு மிகு உறுப்பினர் அவர்களின் உணர்வின் அடிப்படையில் அந்த விதி முறைகள் வகுக்கப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப் படும்.

ஓட்டல்களுக்கு இன்றியமையாப் பொருட்களை அரசே வழங்கும் திட்டம்.

*வினா எண். 282—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களில் பலகாரம் செய்யத் தேவையான பொருட்களை ஓட்டல்களுக்கு அரசே சப்ளை செய்வதுபற்றி அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். உணவு விடுதிகள் உணவுப் பண்டங்களின் விலைகளைக் குறைக்கும் பட்சத்தில் சில இன்றியமையாப் பொருட்களை அவைகளுக்கு வழங்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் தற்போதுள்ள ஓட்டலில் அரிசி மாவு இல்லாத தோசையும், பருப்பு இல்லாத சாம்பாரும், தேங்காய் இல்லாத சட்னியும், தேயிலை இல்லாத தேநீரும், இன்றைக்கு ஊசிப் போனதை மறுநாள் வடைகறியாகவும் மக்களுக்கு வழங்கப் படுகிறது. ஆகவே, இதனைக் கண்காணிக்க பறக்கும் படை அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்படிப்பட்ட ஓட்டலுக்கு எப்படித் தேடிப் போனார் என்பது புரியவில்லை. இருந்தாலும்கூட, ஓட்டல்களில் விற்கப்படுகின்ற பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு அதன் நிர்வாகிகளை அவ்வப்போது அழைத்துப் பேசுகிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், நீங்கள் கூடுமானவரையில் பண்டங்களை கட்டுப் படியாகும் விலையில் கொடுத்தால், குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு வாய்ப்பாக இருக்கும். இப்போது நாங்கள் வெளிமார்க்கெட்டிலே வாங்குவதால், அதன் விலையை அனுசரித்து உயர்த்த வேண்டியிருக்கிறது. இருந்தாலும், ஓரளவுக்கு கட்டுப்படுத்த முயற்சி செய்கிறோம் என்று. ஆகவே,

[1982 மார்ச் 1

எந்தெந்த வகையில் பண்டங்களைத் தரலாம் என்பதுபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். போதுமான அளவுக்கு, லெவி மூலம் கொள்முதல் கிடைத்தால், பண்டங்களை அவர்களுக்குக் கொடுக்கலாமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். குறிப்பாக, பாமாலின் எண்ணெய் கார்டுகாரர்களுக்கே கிடைக்காத நிலையில், நாம் அவர்களுக்கு தருவதற்கு வாய்ப்பில்லை. மைதா, கோதுமை போன்ற பொருள்களைக்கூட கார்டுகாரர்களுக்கு தர இயலாத நிலையில் இருக்கிறோம். இருந்தாலும், ஓட்டல்களுக்கு தருவதுபற்றி இந்த அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9-10]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிரட் தயாரிக்கக் கூடிய சில ஓட்டல்களில், அதற்கான மூலப் பொருள்கள் கிடைக்காத காரணத்தால் அந்தப் பணி தடைபட்டிருக்கிறது என்பதும், குறிப்பாக காதி போர்டின் மூலமாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி பிரட் தயாரித்து வருகிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூட இந்த மூலப் பொருள்கள் கிடைக்காத காரணத்தால் செயலாற்ற முடியாத நிலையில் அவதிக்குள்ளாகியிருப்பதும் அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, இந்த பிரட் தயாரிப்பதற்கான அந்த மூலப் பொருள்களை, இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்காவது நியாய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மைதாவினுடைய அளவு குறவாக இருப்பதன் காரணமாகத்தான் இத்தகைய தட்டுப்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதுபற்றிய விண்ணப்பங்களை ஆராய்ந்து, மைதா அதிகமாக வேண்டும் என்ற வகையில், கோதுமையினுடைய ஒதுக்கீட்டை அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று மத்திய அரசுக்கு இந்த அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது. அதை அவர்கள் அளிக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறபோது, இவர்களுக்கும் நாம் முறையாக வழங்குகின்ற நிலை ஏற்படக் கூடும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சில ஓட்டல்களில், கோதுமை, சீனி, மைதா, ரவை ஆகிய இந்த நான்கு பொருட்களையும், அரசிடமிருந்து கேட்டு நியாய விலையில் வாங்கி, வசதியற்றவர்கள் வாங்க முடியாத, அதிக லாபம் தரக் கூடிய சில இனிப்பு வகைகளை மட்டும் இவைகளைக் கொண்டு செய்து விட்டு, மீதியை பிளாக்கில் விற்று விடுகிறார்கள் என்கிற நிலைமை இருக்கிறதே. ஆகவே, இதை

1982 மார்ச் 1]

மாற்றுகிற வகையில், சாதாரண, ஏழை, நடுத்தர மக்கள் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய விலையில், சென்னையில் அன்ன பூர்ணா ஓட்டல் என்ற வகையில் மத்திய அரசு ஏற்று நடத்து வதைப்போல, தமிழக அரசும் செய்தால் என்ன? அப்படி அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

கோவை தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண். 283—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை தாலுக்காவை கோவை நகரம், புறநகர்ப் பகுதி ஆக இரண்டாகப் பிரித்து கூடுதல் தாலூகா ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு உள்ளடங்கிய கோவை தாலுக்கா, கோவை புறநகர் பகுதி ஆகியவைகளில் உள் அடங்கிய மக்கள் தொகை தற்போது 7 லட்சத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. அந்த வட்டத்தில் புறநகர்ப் பகுதிகளும் இணைந்திருக்கிற காரணத்தால், அந்த தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பது மிகமிக அவசியத் தேவையாக இருக்கிறது என்கிற காரணத் தால், வருகிற தமிழ் புத்தாண்டு தினத்தில் அந்தத் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க அரசு வழிமுறைகளை வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சிபாரிசு வந்த பிறகு முறையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பரிசீலனை நடைபெறுகிற சமயத்தில் அந்தத் தாலுக்கா வின் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நானும், மாண்புமிகு